496

# ஞானதிருஷ்டி

அல்லது

## திரிகால தீபம்

[எல்லோர் கேள்விக்கும் எளிதில் பதில் அளிக்கும்
ஓர் இனிய புத்தகம்]

REGISTRAR
28 SEP 192

பிரசுரகர்த்தர்கள் :

முத்துக்குமரன் புத்தக சாலையார்

50, முல்லாசாயபு வீதி

சென்னை

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது

RL
N26
179849

உ

முருகவேள் துணை

# ஞானதிருஷ்டி

அல்லது

## திரிகால தீபம்

[எல்லோர் கேள்விக்கும் எளிதில் பதில் அளிக்கும் ஓர் இனிய புத்தகம்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1926
MADRAS

பிரசுரகர்த்தர்கள்:

முத்துக்குமரன் புத்தக சாலையார்

**50,** முல்லாசாயபு வீதி

சென்னை

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.
179849
94
183'5 [1]
R6
N26

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1926
MADRAS

# ஞானதிருஷ்டி

Printed at the
Rampaul Press, Madras.

# முன்னோர் மொழிகள்

"தானும் வாழாமல், வாழ்கிறவனையும் வாழவிடாமல் வசைமொழி கூறிக் கெடுக்க முயற்சிக்கின்றவன் நரகத்தை அடைவான்"

* * * *

"பிறருடைய அறிவைத் தாம் கொள்ளைகொண்டு, பிறருடைய உண்மையான வேஷத்தைக்கண்டு தாம் போலிவேடம் பூண்டு நடித்து உலகத்தை ஏமாற்றுவோர் பேடிகளாவர்"

* * * *

"தாங்கள் செல்வதற்கு ஏற்றவழியைத் தெரிந்து கொள்ளச் சக்தியற்ற மூடர்கள், அறிவாளிகள் செல்லும் வழியில் சென்று, தாங்களும், சுகப்படாமல் அவர்களையும் கெடுத்து விடுவார்கள்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1926
MADRAS

## முன்னுரை

சகோதர சகோதரிகளே!

'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்றார் நாயனார். அவர் திருவாக்கைக் கருத்திற்கொண்டு நீங்கள் இந்நூலின் அருமை பெருமைகளை அனுபவத்தில் அறியவேண்டும். 'இவ்வளவு சிறிய நூலின் விலை ஒரு ரூபாவா?' என்று சிலர் கேட்கலாம். வைரக்கல் ஒன்றுக்கு இருநூறு ரூபா வாக இருப்பானேன்? அதே அளவுள்ள புஷ்பராகக்கல் ஒன்றுக்குப் பத்து ரூபாவாக விலை மதிப்பிடவேண்டிய காரணமென்ன? இதற்கு நீங்களே பதில் சொல்லுங்கள்! அறிவாளிகளா யிருப்போர் இந்தப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு மாதம் ஐம்பது, அறுபது ரூபாக்கள் சம்பாதித்து விடலாம்! இஃதோடு அனுப்பப்பட்டிருக்கும் ஞான திருஷ்டியின் காண்ட அட்டவணையில இந்தச் சாஸ்திரத் தைப்பார்க்கும் விதம் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் புஸ்தகத்தை இரகசியமாக வைத்துக்கொண்டு, இதன் காண்ட அட்டவணையின் உதவியால் மற்றவர்கள் நினைப் பதைச் சொல்லிவருவீர்களானால் உலகத்தார் உங்களுக்கு ஏதோ ஒரு தெய்வம் வசியமாய் இருக்கவேண்டும் என்றும், அதனால்தான் நீங்கள் அவர்கள் நினைப்பதைச் சொலலி வருகிறீர்களென்றும் உங்களிடம் மதிப்புக் கொள்ளுவார் கள். இதில், மாம்பழம் வாங்க விருப்பமுள்ள ஒருவன், 'மாம்பழம் வாங்கலாமா? வாங்கக்கூடாதா?' என்று நினைத்துக் கேள்விகேட்பதாக வைத்துக் கொள்ளுவோம். அதற்குப்பதில், 'மாம்பழம் வாங்கும்' அல்லது 'வாங்காதீர்' என்று வரவேண்டுமென்று எதிர்ப்பார்த்தல் கூடாது. 'மாம் பழம் வாங்கலாமா' என்பதற்கு, 'மங்களமுண்டாகும்'

'எண்ணிய காரியம் ஈடேறும்' என்பன போன்ற பதில் வருமானல், 'மாம்பழம் வாங்கலாம்' என்றும், 'நீ எண்ணிய காரியம் கவலைக்கிடமானது' 'வீணுக்கு அலைகின்ருய்' என்பன போன்ற பதில் வருமானல் 'மாம்பழம் வாங்கக்கூடாது' என்றும் பொருள் கொள்ளல்வேண்டும். இப்படியே மற்ற கேள்விகளுக்கும் வரும் பதிலை ஒட்டி நாம் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளல்வேண்டும். சில கேள்விகளுக்கு நேராகவே பதில் வருவதையும்காணலாம். உண்மையைச் சொல்லவேண்டுமானல் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து கேள்விகளுக்குப் பதில் சரியாக வரும். நினைப்பவர்கள் விஷயத்தைச் சரியாக நினைத்துக் கொண்டு தொட்டால் நூற்றுக்கு நூறு சரியாக பதில் வரும். இவ்வளவு சரியாகப் பேர்போன சோசியர்களும் பதில் சொல்லமாட்டார்கள்! இதில் சரியாகப் பதில் வருகிறதென்பது மட்டுமல்ல; வருகின்ற பதில் அனுபவத்தில் பலிக்கின்றது. அதுதான் இதில் விசேஷம்!

இந்நூல் சோசியத்தில் நாடெங்கும் நிகரில்லாத பெயர் பெற்றிருந்த என் முன்னோர் ஒருவரால் செய்யப்பட்டு, எங்கள் முன்னோர்களால் கையாளப்பட்டு வந்ததாகும். இதைக்கொண்டு எங்கள் முன்னோர்கள் எட்சணியைப்போல் மற்றவர்கள் நினைப்பதைச் சொல்லி வந்தார்கள். நான் சிறியவனுய் இருக்கும்போது அனேகர் தினந்தோறும் சாஸ்திரம் கேட்டுக்கொண்டு போக எங்கள் வீட்டிற்கு வந்து போவார்கள். என்முன்னோர்கள் இந்த நூலை மூடி மறைத்து வைத்திருந்தார்கள். நான் பனை ஓலையில் இருந்த இவ்விஷயத்தை உலகத்தார் அறியும்படி இப்போது வெளியிட்டேன்.

சோ. சு. அ.

# அட்டவணை


| காண்டம் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | .... | .... | .... | 11 |
| 2 | .... | .... | .... | 15 |
| 3 | .... | .... | .... | 19 |
| 4 | .... | .... | .... | 23 |
| 5 | .... | .... | .... | 27 |
| 6 | .... | .... | .... | 31 |
| 7 | .... | .... | .... | 35 |
| 8 | .... | .... | .... | 39 |
| 9 | .... | .... | .... | 43 |
| 10 | .... | .... | .... | 47 |

## "நன்மை கடைப்பிடி"

ஒரு நூலின் பயனை
சரியாய் உணர்ந்து அதை அனுபவிக்கக்கூடிய
அறிவாளர்களுக்கு
இந்நூலை
அர்ப்பணம் செய்கின்றேன்

சோ. சு. அ

"நெல்லுக்கு உமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ்ப் பூவுக்குமுண்டு"

# முதற் காண்டம்

உ

முருகவேள்துணை

# ஞானதிருஷ்டி

அல்லது

# திரிகால தீபம்

* நீர் எண்ணிய காரியம் ஈடேறும். ஒழுங்காகக் காரியத்தைச் செய்துகொண்டு வருவீராக.

* அவசரப்படவேண்டாம். உன்னுடைய விரோதிகள் பலத்திருக்கிறார்கள். இன்னும் ஒருவருடத்திற்குப் பிறகுதான் உன்னுடைய எண்ணமெல்லாம் கைகூடும்.

* உமது பிள்ளையின் நடத்தையைக்கண்டு நீர் கவலைப் படவேண்டாம். அவன் சீக்கிரத்தில் சீர்பட்டு விடுவான். ஆனால் அவனிடத்தில் அன்பா யிருந்துகொண்டிருக்கத் தவறாதீர்.

* உம்முடைய உத்தியோகத்திற்குக் கெடுதல் வராது. துஷ்டர்களே அழிவார்கள்.

* நீர் தொடங்குகிற காரியம் முதலில் உமக்குச் சிறிது கஷ்டத்தைக் கொடுக்கும். அதைக்கண்டு எடுத்த காரியத்தை விட்டுவிடாதீர். முடிவில் உமக்கே ஜயம் உண்டாகும்.

* காணமற் போன உமது பொருளைக்கொண்டு போனவன் உம்முடைய நெருங்கிய பந்துவே யாவான். கவனித்துக்கொண்டிருந்தால் கள்வன் அகப்பட்டுக்கொள்வான்.

* நீ தலையிட எண்ணி யிருக்கும் காரியத்தில் உனக்கு அபஜயமே உண்டாகும். நீ அதில் பிரவேசிக்காதே.

* நீ நம்பிக் கொண்டிருக்கும் மனிதன் உனக்கு நன்மை செய்யமாட்டான்.

* உனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டம் சீக்கிரம் விலக வேண்டுமானல், நீ, உன் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துப் பௌர்ணமி தோறும் ஐந்து ஏழைகளுக்கு ஆறுமாதம் வரையில் அன்ன மிட்டுக்கொண்டு வரவேண்டும்.

* உன்னிடத்தில் இரக்கமென்பது கிடையாது. அதனுல்தான் உனக்குத் துன்பம் வருகிறது. ஏழைகளுக்கு உதவிசெய் : உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்.

# இரண்டாவது காண்டம்

* கலகக்காரர்கள் அதிகரித்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடத்தில் நல்ல தனமாய் நடந்துகொள். உனக்கு நன்மை உண்டாகும்.

* உன் சகோதரன் உன்னிடத்தில் அன்பாய் இருக்கிறானென்று அவனை நம்பாதே.

* நீ இப்போது செய்ய எண்ணியிருக்கும் சம்பந்தத்தால் பலத்த நன்மையும் உண்டாகாது; தீமையும் உண்டாகாது.

* நீ நல்லவனாக நடக்க இஷ்டப்பட்டாலும் உலகத்தார் உன்னைக் கெட்டவனென்றே சொல்கிறார்கள். இன்னும் ஒருவருடகாலம் போனால் உன்பகைவன் கூட உன்னை வணங்குவான்.

* உண்மையாகச் சொல்கின்றேன். உனக்கு விரோதி ஒருவன் இக்கின்றான். அவ்விரோதி உன் சொந்தக்காரர்களிலேயே இருக்கின்றான். அவன் இன்னானென்று தெரிந்து கொண்டு அவனை உன்வசப்படுத்திக்கொள். பிறகு உனக்கு நன்மை உண்டாகும்.

* ஏன் கவலைப்படுகின்றாய்! நீ காணமற்போன உயிருள்ள ஒருபொருளைத் தேடி வந்திருக்கின்றாய்! கவலை வேண்டாம். அந்தப்பொருள் தானே உன்னிடம் வந்து சேரும். நீ செய்த பாவம் உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கின்றது. உன்னால் கூடிய தருமத்தைச்செய். சுகமுண்டாகும்.

* அந்தப் பெண்ணால் உமக்குத் துன்பந்தான் நேரும். ஜாக்கிரதையாய் இரும்.

* இப்போது உமக்குப் புதிதாகக் கிடைத்திருக்கும் சிநேகனிடத்தில் நீர் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

* கவலை வேண்டாம். கஷ்டம் ஒழிந்துவிடும்.

* எப்போதும் நீ நம்பி யிருக்கின்றவர்கள் உனக்குத்துணையாய் இருக்கமாட்டார்கள். ஆகையால் உன்வழியை நீ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.

# மூன்றாவது காண்டம்

B

* உன்னுடைய கல்வியைப்பற்றி நீ கவலைப் படாதே! ஆனால் நீ அக்கரையோடு படித்துக் கொண்டு வா. ஜயம்பெறுவாய்.

* நீ எண்ணிக்கொண்டிருக்கும் வியாபாரததில் அதிகத்தொகையைக் கொட்டாதே! ஒரு வருடத்திற்குப் பிறகு எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் அதற்காகச் செலவிடு. இலாபம் வரும்.

* கையில் இருக்கும் பணத்தைக் கரைக்க வழி தேடாதீர்! இப்போது செய்யும் தொழிலையே செய்துகொண்டிரும்.

* நீ செய்ய எண்ணிக்கொண்டிருக்கும் காரியத்தால் எல்லோருக்கும் நன்மையே உண்டாகும். ஆகையால் அதை விடாமல் செய்.

* எங்கே போனாலும் தெற்குத்திசையை நோக்கிப் போகாதே. தீமை உண்டாகும்.

* கவலைக்கிடமான காரியத்தில் பிரவேசிக்க நினைக்கின்றாய். வேண்டாம். மௌனமாய் இரு.

*     *     *     *     *

* இப்போது நீ அண்டியிருக்கும் மனிதன் உனக்கு நன்மையே செய்வான். ஆனால் நீ அவனிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்.

* கலியாணமானல் நன்மை உண்டாகும். சீக்கிரம் கலியாணமாகட்டும்.

* நல்லது. நீ எண்ணும் காரியத்தை இப்பொழுதே செய்யத்தொடங்கு. செய்வதை ஜாக்கிரதையாகச் செய்; நன்மை உண்டாகும்.

# நான்காவது காண்டம்.

* அந்தப் பையன் ஒருபோதும் கல்வியில் முன்னுக்கு வரமாட்டான். அவனை ஏதாவது நல்லதொரு வேலையில் பழகவிடு. நலம் உண்டாகும்.

* அவனைப்பற்றி நீ கவலைப்படாதே. அவன் உன்னை வீணுக மிரட்டுகின்ருன். சாக்கிரதையாகவும், தகுந்த துணையுடனும் காரியத்தை நடத்து. வெற்றி பெறுவாய்.

* உன் முன்னேர் சொத்து உனக்கு நிலைக்காது. ஆகையால் கஷ்டம் வரும்போது, நீயாகவே பிழைக்க வேண்டிய வழியைத் தேடிக்கொள்.

* காணமற்போன பொருள் கிழக்குத் திக்கில் கூரை வீட்டில் இருக்கின்றது. என்ன செய்ய வேண்டுமோ அதைச்செய்து அந்தப் பொருளைக் கண்டு பிடி.

* பலமான அதிர்ஷ்டம் உன்னை எதிர் நோக்கியிருக்கின்றது. கவலைப்படாதே! இரண்டே வருடத்தில் உனக்கு நன்மை வரும்.

* ஓடிப்போன ஜீவன் வடக்கே தங்கியிருக்கிறது. தேடிப்போவதால் பிரயோசன மில்லை. தானே வரும்.

* கடன்பட்டு அந்தக்காரியத்தைச் செய்யாதே. அதனல் ஒன்றும் அதிக சுகம் உண்டாகாது.

* இனி என்ன செய்வதென்று ஏங்குகின்றாய்! இன்னும் இரண்டு வருடத்திற்குள் உன் சொந்தக்காரர் ஒருவரால் உனக்கு நன்மை உண்டாகப்போகிறது.

* உன்னை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. நீ கவலைப்படாதே.

* வீணாக நீ அவனைப்பற்றிக் கவலைப் படாதே! அவனால் யாதொரு நன்மையும் உண்டாகாது.

179849

# ஐந்தாவது காண்டம்

R6
N76

* இப்போது நீ எண்ணிக்கொண்டிருக்கின்றவர்களைப் பற்றிக் கவலைப்படாதே. அவர்களால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது. ஆனால், அவர்களுக்குச் சுகமுண்டாகும்.

* நீ எண்ணிக்கொண்டிருக்கும் காரியத்தைப்பற்றி நீ கவலைப் படாதே! இன்னும் இரண்டு மூன்று நாட்களில் உண்மை இன்னதென்று உனக்கே தெரியும்.

* 'திரைகட லோடியுந் திரவியந்தேடு' என்பது உண்மை யாதலால், திரவியந்தேடும் விஷயத்தில் எங்குப்போனாலும் அவசிய மில்லை. தைரியமாகக் காரியத்தைச்செய். கவலைப்படாதே!

* சீக்கிரத்தில் மங்கள முண்டாகும். அதைரியப் படாதே!

* நீ எண்ணிக் கொண்டிருக்கும் காரியத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்காதே! கடவுளருளால் வெகு சீக்கிரத்தில் நன்மை உண்டாகும்.

* கலகம் அதிகமாகும். ஆகையால் நீ எண்ணிக் கொண்டிருக்கும் விஷயத்தில் தலை இடாதே.

* அலைச்சல்தான் மிச்சமாகும்; நன்மை உண்டாகாது.

* அயோக்கியனை நம்பிக்கொண்டிருக்கின்றாய். அவனால் நன்மை உண்டாகாது.

* நீ மிகவும் தந்திரம் உள்ளவன். அதனால்தான் கடவுள் உன்னை வெறுக்கின்றார். நீ உன் தந்திரத்தை விட்டுவிடு. நன்மை உண்டாகும்.

* உள்ளூரில் உனக்கு நன்மை உண்டாகாது. ஆகையால் அயலூரில் போய்ப் பிழைப்பதே நன்மை யாகும்.

# ஆறாவது காண்டம்

* நீ அந்தத் துஷ்டனிடத்தில் அடிக்கடி போகாதே; அவன் கண்ணிற் படாதே! இப்படிச்செய்தால் அவன் உன்னை மறந்துவிடுவான். பிறகு உனக்கு நன்மை உண்டாகும்.

* கண்டபடி செலவு செய்துவிட்டு இப்போது கஷ்டப்படுகின்றாய். இனிமேலாவது நீ சிக்கனமாக நடந்துகொள். இல்லாவிட்டால் உனக்கு நன்மை உண்டாகாது.

* எங்குப்போனாலும் உன்பாவம் உன்னை விடாது. வீணாகக் கவலைப்படாமல் உன்கையில் இருக்கும் வேலையைக் கருத்தாகச் செய்துகொண்டிரு. அதனால் உனக்கு நன்மை உண்டாகும்.

* நீ செய்த அதிர்ஷ்டம் கொஞ்சந்தான். ஆகையால் நல்லவனாக நடந்து கொண்டால்தான் உனக்கு நன்மை உண்டாகும்.

* உன் பங்காளி உன்னைக்கெடுப்பதற்குத் தயாராய் இருக்கின்றான். நீ மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

* உன்னை அதைரியப் படுத்துகிறவர்கள் அதிகமாய் இருக்கின்றார்கள். நீ அவர்கள் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு எடுத்த காரியத்தை விட்டு விடாதே! செய்துகொண்டேவா. நன்மை உண்டாகும்.

* நீ சோம்பேறியாக இருந்துகொண்டு சோதிடம் பார்க்க வந்துவிட்டாய். நீ உண்மையில் உழைப்பாளியல்ல. உனக்கு எப்படி நன்மை உண்டாகும்?

* கடைசியில் அவன் உன்வழிக்கே வருவான். கவலைப்படாதே!

* உயிருக்கு ஆபத்து வராது. என் கவலைப் படுகிறாய்?

* துன்பம் வந்திருக்கின்றது. ஆனால் நீடித்திராது. அஞ்சாதே!

# ஏழாவது காண்டம்

* நல்லகாலம் சீக்கிரத்தில் வருகிறது. கவலைப் படாதே!

* எப்போதும் நீ எண்ணிக்கொண்டிருக்கின்ற விஷயத்தினுல் உனக்குத் துன்பந்தான் உண்டாகும். ஆகையால் அதை விட்டுவிடு.

* யந்திரத்தினுல் குணமுண்டாகாது; மருந்தினுல்தான் குணமுண்டாகும்.

* இப்போது உன் ஊரைவிட்டுப் போகாதே! இன்னும் நான்கு நாட்களில் நீ நினைத்துக் கொண்டிருக்கும் பேர்வழி உன்னைத் தேடிக் கொண்டு வருவார்

* ஊர் ஊராக என் அலைகின்ருய்? இன்னும் ஆறுமாதம் வரையில் உனக்கு எந்தக்காரியமும் கைகூடாது. ஆனுல், ஊக்கத்துடன் உன் வழியில் வேலைசெய்து கொண்டிருப்பாயாக.

* மங்களம்! மங்களம்!! மங்களம்!!! சுபம்! சுபம்!! சுபம்!!! நலம்! நலம்!! நலம்!!!

* கவலையே வேண்டாம்! நன்மையே உண்டாகும்.

* எத்தனைபேர் உன்னைக் கெடுக்க எண்ணினுலும் நீ பயப்படாதே! கடவுள் உன்பங்கில்தான் இருக்கின்ருர்!

* உனக்கு வேண்டிய சௌகரியங்கள் இருக்கின்றன. நீ பேராசைகொண்டு உன்மனத்தைக் கவலைக்குட் படுத்தாதே! 'உள்ளதே போதும்' என்று மௌனமாய் இரு. உனக்கு அதிர்ஷ்டம் மேன்மேலும் வரப்போகிறது

* ஆயுள் பலமாய் இருக்கின்றது. பயப்பட வேண்டாம் ஆனால் நல்ல வைத்தியனைக் கொண்டு கவனித்து வருவாயாக.

# எட்டாவது காண்டம்

* அவன் அயோக்கியன். அவன் உன்னை எப்படியாவது ஏமாற்றுவான். ஆகையால் அவனோடு சேராதே!

* நல்லவர்கள் சிநேகம் உனக்கு வர வரக்குறைந்து வருகின்றது. ஜாக்கிரதையாய் இருந்து நல்லவர்கள் சினேகத்தை வளர்த்துக்கொள். நன்மை உண்டாகும்.

* அவன் கல்வி யுடையவனென்று மலைக்காதே! உன்னை சமயம்பார்த்துக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்றான். இது முழுவதும் உண்மை!

* எந்நாளும் உன்னோடு பழகியிருக்கின்றவர் உனக்குத் துணையாய் இருப்பார். அவரைக் கைவிடாதே! அவர் நல்லவர். நீ நினைக்கும் காரியம் அவரால் முடியும்.

* நீ செய்துகொண்டிருக்கும் தொழிலை விடாதே! கவனித்துச்செய்; நஷ்டம் வாராது. கொடுத்திருக்கும் கடனை சீக்கிரம் வாங்கிவிடு. இல்லாவிட்டால் வாராது.

* நீ உன்னிடத்தில் விஸ்வாச மில்லாதவர்களை நம்பிக் கவலைப்படுகின்றாய்! இனிமேல் நீ அவர்களைப்பற்றிக் கவலைப்படாதே! உன் காரியத்தைக் கவனித்துக்கொண்டிருப்பாயாக!

* நீ ஏன் பயப்படுகின்றாய். அவன் உன்னை ஒன்றும் செய்ய முடியாது. உன்னுடைய நட்சத்திரம் உச்சத்தில் இருக்கின்றது. இப் போது நீ தலையிடும் எல்லாக் காரியங்களும் எளிதில் நிறைவேறி விடும்.

* ஆம்; நீ தெரிந்துகொள்ள எண்ணி யிருக்கும் விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளுவது தான் நலம்.

* இப்போது நீ எண்ணியிருக்கும் காரியத்தைச் செய்யாதே! அடுத்த தைமாதக் கடைசி வரை யில் பொறுத்துப்பார்!

* அவன் இரண்டொரு நாட்களில் வருவான். கவலைப்படாதே!

# ஒன்பதாவது காண்டம்

* உனக்கு அனுகூலமாகவே எல்லாக் காரியங்களும் நிறைவேறும். வீண் கலக்கம் வேண்டாம்.

* எப்போதும் உனக்கு எண்ணிய காரியம் கைகூடும். நீ கவலைப்படாதே.

* நீ வாங்க எண்ணியிருக்கும் பொருளைச் சீக்கிரமாக வாங்கிவிடு. நன்மை உண்டாகும். இல்லாவிட்டால் தாமதித்துதான் நடைபெறும்.

* நீ உண்மையான வழியில் நடக்காதவரையில் உனக்கு நன்மை உண்டாகாது. உனக்கு ஏற்ற நாட்களில் வாரத்தில் இரண்டுமுறை இரண்டு ஏழைகளுக்கு ஒருமாதம் வரையில் போஜனமளித்துக்கொண்டு வருவாயாக! இப்படிச் செய்தால் நலம் உண்டாகும்.

* நீ செய்ய எண்ணிக்கொண்டிருக்கும் வியாபாரத்தினால் உனக்கு நஷ்டமே உண்டாகும். ஆகையால் கொஞ்சகாலம் வரையில் ஏதாவது உத்திபோகமேனும், உன் சொந்தக்காரியமேனும் பார்த்துக்கொண்டிருப்பாயாக.

* இப்போது உனக்கு வரவேண்டிய தொகையை நம்பிக்கொண்டு நீ செய்ய எண்ணி இருக்கும் காரியத்தைத் தொடங்காதே! உனக்கு வர வேண்டிய தொகை இம்மாதத்தில் வராது. ஆகையால் உன்கையில் பொருளை வைத்துக் கொண்டு நீ எண்ணியிருக்கும் காரியத்தைத் தொடங்குவாயாக.

* நீ எண்ணி யிருக்கின்றபடி அந்தப்பொருளை வாங்கலாம். நன்மையே உண்டாகும். ஆனால், கவனித்து வாங்கு. அந்தப்பேர்வழி உன்னை ஏமாற்ற எண்ணிக்கொண்டிருக்கின்றான்.

* நீர் வழக்குங் கையுமாக இருப்பதை விட்டுவிடும். உமக்கு நன்மை உண்டாகும். நீர் உமது தொழிலைச் செய்துகொண்டிருந்தால் உமக்கு நன்மை உண்டாகும்.

* அவனுடைய அயோக்கியத்தனம் நீடித்திராது. அவன் சீக்கிரம் அடங்கிவிடுவான். ஆனால் உன் இஷ்ட தெய்வத்திற்கு ஏதாவது செய்.

* பயப்படாதே! சீக்கிரத்தில் நன்மை உண்டாகும்.

# பத்தாவது காண்டம்

* நீ நினைக்கிறவர்கள் கையில் பணம் இருக்கின றது. ஆனால் அவர்கள் கையில் ஒன்றும் இல்லா தவர்களைப்போல் வேஷம் போடுகிறார்கள். நீ அர்களை நம்பி ஏமாந்து போகவேண்டாம்.

* சீக்கிரம் கலியாணமாகும். பயப்படவேண் டாம் ; தரகிரிகளைமட்டும் நம்பவேண்டாம்.

* அந்த நகையைச் செய்துகொள்ள உன்னால் முடியும். துன்பப்படாதே !

* உன் பிள்ளைகளால் உனக்கு அதிக நன்மை உண்டாகாது. நீ எப்போதும் யாருக்கும் தெரி யாமல் கொஞ்சந் தொகையை உன் கையில் வைத்துக்கொண்டிருந்தால்தான் நீ கஷ்டமில் லாமல் காலந் தள்ளலாம்.

* ஆகுநாளன்றி எக்காரியமும் ஆகாது. நீ துன் பப்படுவதனால் பிரயோசனமில்லை. நான் சொல் வதைக்கேள். இன்னும் ஒருவருடம் வரையில் பொறுத்துக்கொண்டிரு ஒருவருடத்திற்குப் பிறகு உனக்கு எல்லாக்காரியங்களும் கைகூடும்.

* அந்த மனிதன் உன்னிடத்தில் இஷ்டமா யிருக கிறானென்று எண்ணாதே ! அவன், நீ ஏமாந்தால், உன்னிடம் இருக்கும் பொருளைக் கொண்டு போவதோடும் உன்னையும் தெருவில் விட்டுவிடுவான். ஆகையால் இப்போது அவ னால் நன்மை உண்டாவதா யிருந்தாலும் அவனை நீ நம்பாதே !

* அவர்கள் நடத்தை சரியானதன்று. யோக்கியர்களைப்போல் பேசுவதைக் கண்டு மயங்காதே.

* இப்போது உம்மிடம் இருக்கும் காரியஸ்தனிடம் நீர் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் உம்மை ஏமாற்றி விடுவான்.

* பங்கு வேண்டுவதில்லை. இருக்கின்ற மாதிரியே இருப்பது நன்மையாகும்.

* அவனிடத்தில் நீ சந்தேகப் படவேண்டாம். அவன் ஒன்றும் கொடுக்கவில்லையே என்று எண்ணவேண்டாம். இப்போது அவன் ஒன்றும் கொடுக்காவிட்டாலும் பிறகு அவனால் அதிக நன்மையுண்டாகும். ஆகையால் அவன் இஷ்டப்படி இப்போது நீ நடந்துகொண்டால் சுகமுண்டாகும்.

முற்றிற்று

சென்னை-600 005.
179849